குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 56/2020

அ.சா. 4

2024–ம் ஆண்டு ஏப்ரல் 22–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாஷ் | ஜாதி | |
| தந்தை பெயர் | குருசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 1.38 மணி,

Accused Nayagan present. Advocate Mr.Thiyagarajan present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் முத்துநாயக்கன்பட்டியில் குடியிருந்து கொண்டு ஓமலூர் பேருந்து நிலையம் எதிரே உள்ள சிவா காபி பாரில் கேசியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 05.12.2019 ம் தேதி நான் கடையில் வேலை செய்து கொண்டிருந்த போது காலை 07.00 மணியளவில் வெளியே நகையை திருடி கொண்டுபோவதாக ஒரு பெண்மணி கத்தும் சத்தம் கேட்டது. நான் வெளியே சென்று பார்த்தேன். ஒரு அம்மா நின்று நகையை பறித்து சென்று விட்டதாக சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார். நகையை பறித்த நபர்கள் அங்கு இல்லை ஓடிவிட்டார்கள்.

2. அதன்பின்பு போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்துகள் என்னுடையது தான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 3 ஆகவும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.04.22 17:58:13 +0530

என்னுடன் கடையில் வேலை செய்த நபர்களை விசாரித்தார்கள். என்முன்பாக போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 05.12.2019 ம் தேதி காலை 07.00 மணியளவில் நான் வேலை செய்த காபி பார் அருகே நடந்த அ.சா.1 னின் கழுத்தில் இருந்து ஆஜர் எதிரி 3 பவுன் தங்க நகையை திருடி சென்ற சத்தம் கேட்டு நான் போய் பார்த்ததாகவும் அதன்பின்பு அன்றைய தினம் 16.30 மணியளவில் ஓமலூர் பிருந்தாவன் தியேட்டர் அருகே ஆஜர் எதிரியை போலீசார் விசாரித்த போது ஆஜர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போலீசார் பதிவு செய்த போது நான் சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு அதை தொடர்ந்து ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 2 1/2 பவுன் எடைக் கொண்ட தங்க தாலி செயின், சுமார் 1/2 பவுன் எடைக் கொண்ட தங்க தாலி ஆகியவற்றை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போது சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு மேற்கண்ட சங்கதிகளை விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை

**மறு விசாரணை : இல்லை**

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.04.22 17:58:25 +0530

விசாரணை முடிந்த நேரம்: 01.50 மணி,